//அவசரம்// //தனிகவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 622 /அ 2 /2022 நாள் 25.04.2022

பொருள் பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் – அரசு பள்ளிகளில் உள்ள மின் இணைப்புகளுக்கு நீண்ட காலமாக செலுத்தப்படாமல் உள்ள மின்கட்டண நிலுவைத் தொகையினை செலுத்த கோரியது –இணைப்பில் உள்ள தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட தொடக்க / நடுநிலைப் பள்ளிகளின் மின் கட்டண நிலுவை தொகை உடன் செலுத்தி அதன் அறிக்கை அனுப்பக் கோருதல் – தொடர்பாக.

பார்வை

1. திருப்பத்தூர், மேற்பார்வை பெறியாளர் அவர்களின் க,எண்059/திமிபவ/துநிகஅ/சஒபி/கமே/உ,1/கோ./2022, நாள் 19.04.2022
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 21.02.2022

பார்வை 2 ல் காணும் கடிதத்தின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க / நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டத்திற்கு செலுத்த வேண்டிய மின் நுகர்வு நிலுவை தொகை **ரூ.5047624** /- ( ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து அறநூற்று இருபத்து நான்கு மட்டும் ) நீண்ட காலமாக செலுத்தப்படாமலும் சில மின் இணைப்புகளுக்கு 2016 முதல் இந்நாள் வரை நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலூர், வருவாய் மாவட்டத்தில் உள்ள பார்வை 1ல் காணும் கடிதத்தின் படி, இணைப்பில் உள்ள **அரசு தொடக்க / நடுநிலை/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும்** மின் கட்டணத் தொகை நிலுவையில் உள்ள பள்ளிகள் விரைந்து **இம்மாத இறுதிக்குள்** ( 06.05.2022 ) நிலுவையில் உள்ள தொகையினை செலுத்திவிட்டு அதற்குரிய ரசீது நகலினை **தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் அந்ததந்த வட்டாரக் கல்வி அலுவலகத்திலும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் முதன்மைக் கல்வி அலுவலக அ2 பிரிவில் உடன் சமர்பிக்குமாறு அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது,**

**மேலும் தொடக்க/ நடுநிலைப் பள்ளிகள் அணைக்கட்டு / குடியாத்தம்/ பேர்ணாம்பட்டு / மாதனூர் ஆகிய ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளிகளின் மின் கட்டண நிலுவைத் தொகை அதிக எண்ணிக்கையில் உள்ளது எனவே சார்ந்த பள்ளியின் மின் இணைப்பு எண் மற்றும் இணைப்பில் உள்ள பள்ளியின் மின் இணைப்பு எண் சரிபார்த்து அதற்குரிய செலுத்துச் சீட்டு நகல் இணைத்தும் தங்கள் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பள்ளிகளின் நிலுவை தொகை செலுத்தப்பட்டது என வட்டாரக் கல்வி அலுவலரின் சான்றுடன் தொகுத்து இவ்வலுவகத்திற்கு 2 நகல்களாகவும் அனுப்பி வைக்குமாறு சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.**

மேலும், மேற்காண் நிலுவை தொகை உள்ள பள்ளிகள் மேற்காண் தேதிக்குள் செலுத்தாமல் உள்ளது என கண்டறியப்படின் அப்பள்ளியின் தலைமைஆசிரியர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது,.

**இணைப்பு**

பள்ளிகளின் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

**பெறுநர்**

1. தலைமைஆசிரியர்கள்
   அனைத்து அரசு தொடக்க/நடுநிலை / உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள்
   குடியாத்தம்/ அணைக்கட்டு/ பேர்ணாம்பட்டு/ மாதனூர் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கையின் பொருட்டும் அனுப்பலாகிறது,

**நகல்**

1. திருப்பத்தூர் , மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காக ( மாதனூர் ஒன்றியத்தின் பள்ளிகளுக்கு தொடர் நடவடிக்கைக்காக ) கனிவுடன் அனுப்பலாகிறது.
2. திருப்பத்தூர் மேற்பார்வை பெறியாளர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.